சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

OS No.12/2016

2026ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 22–ம் நாள் பிரதிவாதி சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண்.44வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.N.கௌரிமாரியம்மாள் கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் – உதயக்குமார் (Dw2) | தொழில் |
| த/பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் 4 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பு சாட்சி ஆவேன். என்னுடைய சாட்சியத்தை பிரமாணவாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். இதைப்படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். என் பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளவாறு 29.07.1956ம் தேதியிட்ட தளமனை அம்பலம் உறவின்முறைக்கு வீரப்பன் செட்டியார் எழுதிக்கொடுத்த பதிவு தானசெட்டில்மெண்டு பத்திரம் SRO Copy **பி.வா.சா.ஆ.4**. 07.07.1984 ம் தேதியிட்ட சொக்கலிங்கபுரம் தேவாங்கர் வர்த்தக சங்கத்திற்கு தளமனை அம்பலம் உறவின்முறை எழுதிக்கொடுத்த பதிவு தானசெட்டில்மெண்டு பத்திரம்SRO Copy **பி.வா.சா.ஆ.5.** 30.05.1988 ம் தேதியிட்ட சொக்கலிங்கபுரம் தேவாங்கர் வர்த்தக சங்கம் தளமனை அம்பலம் உறவின்முறைக்கு எழுதிக் கொடுத்த பதிவு தானசெட்டில்மெண்டு ரத்து பத்திரம் SRO Copy **பி.வா.சா.ஆ.6.** தாவா சொத்தை காட்டக்கூடிய போட்டோக்கள் அசல் **பி.வா.சா.ஆ 7**. போட்டோக்களுக்குரிய சிடி அசல் **பி.வா.சா.ஆ.8**. 04.02.2016 ம் தேதியிட்ட

வில்லங்க சான்றிதழ் எண். 723/2016 அசல் **பி.வா.சா.ஆ.9.** 05.05.2016ம் தேதியிட்ட வில்லங்க சான்றிதழ் எண்.2971/2016 அசல் **பி.வா.சா.ஆ.10.** 09.03.2016 ம் தேதியிட்ட அருப்புக்கோட்டை டவுண் வார்டு எண்.F, பிளாக் 2, நகர புல எண். 11/1 க்குரிய புலவரைபடம் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.11.** 09.03.2016 ம் தேதியிட்ட அருப்புக்கோட்டை டவுண் வார்டு எண்.F, பிளாக் 2, நகர புல எண். 11/1 க்குரிய சர்வே பதிவேடு சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.12.** 10.12.2015ம் தேதியிட்ட தளமனை அம்பலம் உறவின்முறையினரால் செலுத்திய சொத்துவரி ரசீது (எண்ணம் 2) அசல் **பி.வா.சா.ஆ 13.** 09.09.1905 ம் தேதியிட்ட ராமலிங்க மூப்பன் வகையறா சங்கரலிங்கம் செட்டியார் வகையறாவிற்கு எழுதிக்கொடுத்த பதிவு கிரையப்பத்திரம் SRO Copy **பி.வா.சா.ஆ 14**. 21.05.1920 ம் தேதியிட்ட சங்கரலிங்கம் செட்டியார் வகையறா எழுதி வைத்த பதிவு செட்டில்மெண்டு பத்திரம் SRO Copy **பி.வா.சா.ஆ 15**. பிராதை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன். ( வாதிகள் தரப்பில் சாட்சி வழக்கில் தரப்பினராக இல்லாத நிலையில் விசாரிக்க ஆட்சேபணை செய்து அது பதிவு செய்யப்படுகிறது. )

(வாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.